# ‘காவல் கோட்டம்’ புதினத்தில் இடம் பெறும் வரலாற்றுக் கூறுகள்

**கோ.கலைமகள் & முனைவர்.கா.கணநாதன்**
**தமிழ்ப்பண்பாட்டு மையம்,**
**அழகப்பா பல்கலைக் கழகம், காரைக்குடி – 3**

127

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டைய காலம் தொட்டே மக்கள் கூடி வாழும் பண்போடு வாழ்ந்து வருகின்றனர். நில அடிப்படையில் கூடிவாழ்ந்தே மக்கள் பல்வேறு இனக்குழுக்களாக கால வெள்ளத்தில் சிக்குண்டு நிலத்தை அடிப்படையாகக் கொண்டு தங்களது வாழ்வியலை அமைத்து வாழ்ந்து வந்தனர். மக்கள் வாழ்வு, சமூக கலாச்சார அரசியல் தளங்களில் ஏற்படும் மாறுதல்களும், புதுவரவும் இணைந்ததுதான் வரலாறு. வரலாற்று நிகழ்வுளோடு, புனைவினையும் கலந்து தம் படைப்பினை உருவாக்கி உள்ளார். எழுத்தாளர் சு.வெங்கடேசன். இவரின் ‘காவல் கோட்டம்’ புதினத்தில் மதுரையை மையப்படுத்திய பல்வேறு நிகழ்வுகளையும் ‘தாதனூர்’ என்னும் கிராம மக்களின் வாழ்வியலையும், அக் காலகட்டத்தில் ஏற்பட்ட அரசியல், சமூக நிகழ்வுகளை வரலாற்றுக் கூறுகளுடன் இணைத்துப் படைத்துள்ளார். காவல் மற்றும் களவு என்ற இரு நிலைகளினூடே சிக்கித் ததிக்கும் கள்ளர் சமுதாய மக்களின் வாழ்வியலையும் அழகாக சித்தரித்துக் காட்டியுள்ளார். நாயக்கர் கால அரசியல் சூழலமைவுகளையும், ஆங்கிலேய ஆட்சியினரது ஆளுகைகளையும், அக்காலக்கட்டத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறைகளையும், வரலாற்று கூறுகளையும் இணைந்துவிளக்கும் வண்ணம் இக்கட்டுரை அமைகிறது.

**கலைச்சொற்கள்**

சமூகம், களவு, காவல், இனம், குலம், குடி, இனக்குழுக்கள், இரவுக்குறி, குற்றம்பரம்பரை, ஊர்காவல்

**முன்னுரை**

வரலாற்று குறுக்குவெட்டு தோற்றங்களை புனைவுகள், ஆவணப்படுத்தி இருக்கின்றன. வரலாறு புனைவுகளாக அன்றி, புளைவுகளின் வழியே கதைகளாகும் போது வாசகரை உணர்ச்சிகரமாக நெருங்குகிறது. சமூகத்தை வழிநடத்தவும், தவறுகளைச் சுட்டிக்காட்டவும், கற்றுக்கொள்ளவும் வரலாறுகளே பெரும் கருவி. அந்த வரலாறு இலக்கியத்தன்மை அடைகின்றபோது இன்னும் கவனம் பெறுகிறது. புனைவுகளின் வழி வரலாறுகள் மீட்டுருவாக்கம் செய்ப்படுகிறது.

**“காவல் கோட்டம்”** வழியாகப் பரவலாக அறியப்பட்ட எழுத்தாளர் சு.வெங்கடேசன் சாகித்ய அகாதமி விருதையும் அந் நாவலுக்காக பெற்றார். மனிதன் வரலாற்றினுடைய குழந்தை காலத்தை வேண்டுமென்றால் கடந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்று பிரிக்கலாம். வாழ்க்கையை அவ்வாறு பிரித்து பார்க்க முடியாது. சிந்தனை முறை, மொழி, சொற்கள் எல்லாவற்றுக்கும் மிகப்பெரிய வரலாறு இருக்கிறது. வரலாற்றின் பெருநதியில் மிதக்கிற சிற்றலை போலத்தான் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்வும் இருக்கிறது. “காவல் கோட்டம்” புதினத்தை எழுத்தாளர் சு.வெங்கடேசன் வரலாற்று நிகழ்வுகளோடு சேர்த்து புனைவாக படைத்துள்ளார். இப் புதினத்தில் இடம்பெறும் வரலாற்றுக் கூறுகளை ஆராயும் வண்ணம் இக்கட்டுரை அமைந்துள்ளது.

**காவல் கோட்டம்**

இந்திய அரசு இலக்கியத்துக்கு வழங்கும் உயரிய விருதான சாகித்ய அகாடமி விருது பெற்ற நாவல். ஒடுக்கப்பட்ட சமூகத்தில் உணர்வுகள் தாங்கிய வாழ்வியல் பெட்டகம். ஆதிகாலத்தில் கூடி வாழ்ந்து கொண்டிருந்த மனித இனம் மாபெரும் சமூகமாக உருவெடுத்த பிறகு பிரிவுகள் ஏற்பட்டன. தொழிலின் அடிப்படையில் சாதிகள் பிரிக்கப்பட்டன என்று சொல்லப்பட்டு வந்த காலத்தில் களவு ஒரு தொழிலாக்கி கொண்டது. அந்த வகையறாக்களைத்தான் சமூகம், “குற்றப்பரம்பரைகள்” என அடையாளம் காட்டியது. மதுரையில் நிலை கொண்டிருந்த ஒரு சமுதாயத்தின் வரலாறு இந்தக் காவல் கோட்டம். இப் புதினம் நாயக்கர் ஆட்சி காலத்தில் தொடங்கி 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை நீள்கிறது. மதுரை அருகே தாதனூர் எனும் கிராமத்தில் நடைபெறுவதாக அமைகிறது. தெலுங்கு நாயக்கர்களும், கள்ளர்களும் எப்படி ஒருவருடன் ஒருவர் மோதி சமசரம் செய்து கொள்கிறார்கள் என்பதை அடிப்படையாகக் கொண்டும், மதுரை நகரின் வரலாற்றைக் கூறுவது போலவும் உள்ளது.

**வரலாற்றுச் செய்திகள்**

“காவல் கோட்டம்” புதினம் 1310-ல் நிகழ்ந்த மாலிக்கபூரின் படையெடுப்பில் தொடங்கி, குமார கம்பணன் படையெடுப்பு, மதுரையில் நாயக்கர் ஆட்சி நிலை பெறுதல், பாளையப்பட்டுகள் உருவாக்கப்பட்டு, பாளையக்காரர்கள் நியமிக்கப்படல், சந்தா சாகிப்பின் படையெடுப்பு, கான்சாகிப் ஆட்சி, கிழக்கிந்தியட்க கம்பெனியின் ஆட்சி, பின்னர் அது பிரிட்டிஷ் அரசின் ஆட்சியாக மாறுதல், ஒவ்வொரு அரசும் வரி என்ற பெயராலும், படையெடுப்பு என்ற பெயராலும் நிகழ்த்திய கொள்ளைகள் இவற்றை முன் நின்று நடத்த உதவிய படைத்தளபதிகள், அதிகாரிகள் என இந் நாவல் மிகப்பெரிய திரைச் சீலையில் தீட்டப்பட்டுள்ளது. மேற்கூறிய வரலாற்று நிகழ்வுகளின் ஊடே, மதுரை நகரும் அதன் அருகிலுள்ள தாதனூர் கிராமமும் பெற்ற மாறுதல்களே இந் நாவல் முழுவதும் இழையோடுகின்றது.

கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியில் பல மாறுதல்கள் நிகழ்கின்றன. ஆயுதங்கள் வைக்கத்தடை விதிக்கப்படுகிறது. ஜமீன்தாரி முறை அறிமுகமாகிறது. நாயக்கர் ஆட்சியில் போர் வீரர்களாயிருந்த “கொல்லவாருங்கள்” என் போர் மேய்ச்சல் தொழிலுக்கு மாறுகின்றனர். கான்சாகிப் கொடூரமாகக் கொல்லப்படுகின்றான். மதுரை நகரைச் சுற்றியிருந்த கோட்டையும் அகழியும் தூர்க்கப்படுகின்றன.

**காவலும் களவும்**

“நாடு பல சிறுநாடுகளாகப் பிரிக்கப்பட்டுச் சிற்றரசர் பலர் கையில் இருந்து வந்தது. ஒவ்வொரு சிற்றரசரும் தத்தம் நாட்டைக் காவல் புரிந்தனர், வருவாயில் ஒரு பகுதி வேரரசனுக்கும் ஒரு பகுதி தங்களுக்கும் ஒரு பகுதி தம் காவலுக்கு உட்பட்ட நாட்டு நலத்துக்கும் செலவழித்தனர். இங்ஙனம் செய்து வந்தவர்களே நாயக்கர் காலத்துப் பாளையக்காரர்கள், விசய நகர ஆட்சியில் “காவல்காரர்” என்ற பெயரில் ஊர்க்காவலர் இருந்தனர்.”

டெல்லி படையெடுப்பிலிருந்து தப்பிய சடச்சியின் வழித்தோன்றல்கள் கள்ளர் பரம்பரையாக தாதனூர் மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் வாழ்ந்து வருகின்றார்கள். தாதனூர் கிராமக் கள்வர்களின் வாழ்க்கை தான் காவல் கோட்டம். களவு அவர்களின் குழத்தொழில். திருமலை நாயக்கர் கோட்டையில் களவாடி ராஜ முத்திரையை எடுத்து கெட்டிக்காரத்தனம் அவர்களுக்கு மதுரைக் கோட்டையைக் காவல் காக்கும் பொறுப்பைப் பரிசாகப் பெற்றுத் தருகிறது.

அந்தப் பெருமையுடன் அவர்கள் வழிவழியாக கோட்டையைப் பாதுகாத்து வருகிறார்கள். காவல் கூலி அவர்களின் வாழ்வாதாரமாக மாறுகிறது. காவல் கூலி அல்லது காவல் அதிகாரத்தைக் கைப்பற்ற மற்றும் தக்கவைத்துக் கொள்ள களவைக் கையிலெடுக்கிறார்கள். களவு காவலாகவும், காவல் களவாகவும் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப மாறும் திறம் படைத்தது. தாதனூர் மக்கள் களவுக்காரர்களாக இருந்தாலும் அவர்களுக்கு என்று ஒரு பாரம்பரியம் உண்டு அவர்களாக அமைத்துக் கொண்ட எந்தக் கட்டுப்பாடுகளையும் அவர்கள் மீறுவதில்லை. களவு, காவல் என்ற இரண்டு செயல்பாடுகளுடன் நெருக்கமான தொடர்புடைய இருட்டு இதன் அடிப்படையில் இந்நாவலில் ஆங்காங்கே இருட்டு குறித்த வர்ணனைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் சில,

**“களத்தில் காயும் தானியங்களைக் கிளறுவதைப் போல இருளைக் கால்களால் கிளறிப் பார்த்துக் கொண்டிருந்தான் பேயாண்டி”[1] – பக் (427)**

**“தாதனூர்க்காரர்கள் எழுந்து இருளைப் பாயெனச் சுருட்டிக் கக்கத்தில் வைத்துக் கொண்டு அமண மலை ஆலமரத்தை நோக்கி நடக்கத் தொடங்கினார்”[2] பக் – 422**

**அந்தியர்களின் ஆதிக்கம்**

வெள்ளையர்கள் மதுரையை ஆக்கிரமித்துத் தன் ஆதிக்ததைச் செலுத்தத் தொடங்கியதும் தாதனூர்க் கள்ளர்களின் போதாத காலம் ஆரம்பமாகிறது. வெள்ளையர்கள் எல்லையில் இவர்கள் காலவல் காப்பதைத் தடுக்க முடிவு செய்கிறார்கள். மதுரை மக்கள் பலர் காவல்கார வேலையில் அமர்கிறார்கள். தாமரை போல இருக்கும் மதுரைக் கோட்டையை பிளாக்பர்ன் எனும் அதிகாரி இதழ் விரிப்பதைப் போல பல சூழ்ச்சிகள் கையாண்டு தகர்த்தெறிகிறார். அதிகாரிகள் பல விதமான உத்திகளைக் கையாண்டு கள்ளர்களை ஒடுக்க முனைகிறார்கள். இந்தியர்களுக்கு வரலாற்றுணர்வே இல்லை என்றுதான் பிளாக்கேர்னுக்கு எண்ணம் இருந்தது. மதுரை நகரம் தாதுப் பஞ்சத்தை மிகுந்த சிரமங்களுக்கிடையில் கடக்கிறது. பல பேர் வறுமையில் சிக்கி சிறிதளவுக் கஞ்சிக்காக வெள்ளைக்காரன் கட்டும் அணைக்கட்டு பணிகளில் ஈடு'படுகின்றனர். கடுமையாக வேலை வாங்கப்படுகிறது. கள்ளர்கள் அணைக்கட்டு தண்ணீரைப் பயன்படுத்தி விவசாயத்தில் ஈடுபடுகின்றனர்., தாதானூர்க் காரர்களுக்கு களவொன்றே கைகொடுக்கின்றது. குற்ற பரப்பரைச் சட்டத்தை அமல்படுத்துகிறது ஆங்கிலேய அரசு. அனைத்து கள்ளர்களும் கணக்கெடுக்கப் படுகிறார்கள். கைரேகை பதியப் படுகிறது.

பிரமலைக் கள்ளரிடம் அமெரிக்கன் மதுரை மிஷன் என்ற அமைப்பு பணியாற்றியுள்ளது. இது குறித்தும் இந்நாவலில் சில செய்திகள் இடம் பெற்றுள்ளன. இம்மிஷனில் பணியாற்றும் டேவிட் சாம்ராஜ் என்ற இளங்குரு, பிரமலைக்கள்ளரிடம் அனுதாபம் கொண்டு செயல்படும் பாத்திரமாகப் பாதுகாக்க அனுதாபம் கொண்டு செயல்படும் பாத்திரமாகப் பயடைக்கப்பட்டுள்ளார். இம் மக்களைப் பாதுகாக்க அவர் மேற்கொள்ளும் முயற்சிகள் நாவலின் ஆங்காங்கே இடம் பெறுகின்றன.

“பதினாறாம் நூற்றாண்டில் போர்ச்சுக்கீசியக் காலனியத்தின் துணையுடன் தமிழ்நாட்டில் பரவிய கத்தோலிக்கம் தொடங்கி, ஆங்கியக் காலனியாட்சியின் போது இங்கு செயல்பட்ட சீர்திருத்தக் கிறிஸ்தவத்தின் பல்வேறு பிரிவுகள் உட்பட எவையும் இப்போக்கிற்கு விதிவிலக்கல்ல. இதற்கு மேல் அரிமெரிக்கன் மதுரை மிஷனின் செயல்பாடுகள் குறித்து அவர் எதுவும் விவரிக்கவில்லை. இதன் மூலம் பிரமலைக் கள்ளர்களின் கிறித்தவ மதமாற்றம் குறித்த ஆவணமாக நாகல் மாறவதைத் தவிர்த்துள்ளார்.”[3] பக் – 109



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

சமூக வளர்ச்சியில் தேவையற்றதாக மாறிப்போன பாரம்பரியக் காவல் முறையில் இருந்து தம்மை மாற்றிக் கொள்ள முடியாத சூழ்நிலையில் அவர்களின் முடிவு தவிர்க்க முடியைத ஒன்றாகிபோனது.

**காவல் சமூகம்**

தமிழ்ச் சமூகம் வேளாண் சமூகமாக வளர்ச்சி பெற்று வாணிகம் பெருக்கி நிலையில் காவல் முறை உருப்பெற்றது. களவுத் தொழிலும், அதைத் தடுக்கும் காவல் தொழிலும், தமிழ்ச் சமூகத்தின் பழமையான தொழில் வரிசையில் இடம் பெற்றுள்ளன.

அகத்திணையில் இடம்பெறும் இரவுக்குறி இடையூறுகளில் ஒன்றாகக் காவல்களின் நடமாட்டம் குறிப்பிடப்படுகிறது. இரவு நேரத்தில் உறங்காது காவல் பணியை மேற்கொள்ளும் செயல் பற்றி "துஞ்சாக் கண்ணர்" துஞ்சாக் காவலர் என்று சங்க இலக்கியங்கள் காவல் தொழில் செய்வோரைக் குறிப்பிடுகின்றன. களவுத் தொழிலை ஒரு கலையாகக் கற்றிருந்தவர்களைப் பற்றி மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது. ஒரு சமூகத்தின் வேலைப் பிரிவுனையானது அச் சமூகத்தின் இயல்பான வளர்ச்சிப் போக்கிற்கேற்ப மாறுதலையும் அல்லது மெல்ல மறையும்.

"கள்வர்களால் மக்களுக்கு தரப்பட்ட துன்பங்கள் துடைக்கப்பட்டு, நாட்டில் அமைதிக்கு மன்னர்கள் வழி வகுத்னர். ராணுவ முறையுடன் காவல் முறையும் இருந்தது. ஒவ்வொரு கிராமத்திலும் தலையாரிகள் என அழைக்கப்பட்ட காவல்காரர்கள் இருந்தனர். கிராம மக்களின் உடைமைகளைப் பாதுகாப்பது அவருடைய முழு பொறுப்பாகும்"[4]

காவல்கலையும் களவையும் இரு கண்களாக கொண்ட ஒரு சமூகம் எப்படி சாவுகள் தண்டனைகள் வழியே குற்றப்பரம்பரை ஆக்கப்பட்டது என்றும் இந்நாவலில் காணலாம்.

**கள்ளர் வரலாறு**

கள்வர் என்னும் சொல்லுக்குப் பிறர் பொருளை வெளவுவோர் என்னும் பொருளும் உண்டு. பகைவர் என்னும் பொருளும் உண்டு. ஆசிரியர் இந்நாட்டு பழங்குடிகளைத் "தஸ்யூக்கள்" என வழங்குகின்றனர். இங்ஙனம் ஆரியர்களால் தமக்குப் பகைவர் என்று அழைக்கப்பட்ட பழந்தமிழரே கள்வர் என்னும் சொல்லுக்குப் பொருளாய் நிற்றல் துணிப்படுகிறது. "கள்ளர் என்னுஞ் சொல்லுக்கு கரியவர், பகைவர் என்ற இரு பொருளம், இந்திர குலத்தவர் என்னுஞ் சொல்லுக்குக் கரியவர் என்ற பொருளும் இங்கே கொள்ளப்பட்டுள்ளன."[5] பக்-42

கள்ளர் நாடு என்பது, கள்ளர் சமூகத்தினர் பெரும்பான்மையாக வசிக்கின்ற நிலப்பரப்பைக் குறிக்கும் "கள்ளர்கள்" என்றாரே திருடர்கள் என்னும் அழுத்தமான பதிவு, சமூகத்தின் பொதுப்புத்தியில் உறைந்து போய்க் கிடக்கிறது. சங்க காலத்திலும் ஆநிரைலகளைக் கவர்ந்து செல்லும் கூட்டம் ஒன்று இருந்தது. அவர்கள் "ஆநிலைக் கள்வர்" எனப்பட்டனர். எனவே கள்ளர்கள் கள்வர் ஆக்கப்பட்டனர்.

வீரர் என்னும் பொருள் கற்றியே "கள்ளர்" என்னும் குலப்பெயர் தோன்றியிருக்கிறது என்று பொருள் எழுதுகிறார். ந.மு.வேங்கடசாமி நாட்டார். மேலும் கள்ளவர் என்பதே உயர்ந்த பொருள்தான் என்பதைச் சங்க இலக்கியங்களில் பயின்று வரும் "கள்வர் கோமான் புல்லி", "கள்வர் பெருமகள் எடுத்துக் காட்டியுள்ளார். ந.மு.வேங்கடசாமி நாட்டார் கள்ளர்களைப் பொறுத்தவரை "திருட்டு என்பது சமூகக் குற்றமாகக் கருதப்படவில்லை, மாறாக முதன்மையான பொழுதுபோக்காகவே இருந்து வந்துள்ளது."

கள்ளர்கள் வேளாண்மை மூலமாகத் தமது வருவாயின் ஒரு பகுதியைப் பெற்றிருந்தாலும் துப்புக்கூலி குடிக்கூலி என்னும் இரு வழிகள் மூலமாகவும் தங்களது வருவாயைப் பெருக்கிக் கொண்டனர்.

ஆட்சிமுறை மாறும்போது ஆளுவோரின் தன்மையும் மாறுகிறது. மன்னர்களின் ஆட்சி நிலவியபோது பிறகுடிகளிடமிருந்து தம்மைக் காக்கும் பொறுப்பை கள்ளர் சமூகத்தாரிடம் ஆட்சியாளர்கள் ஒப்படைத்தனர். ஆனால் அதிகாரத்தை எல்லாவிதமாகப் பயன்படுத்திய பிரிட்டிஷ் அரசு ஆட்சிக்கு வந்தபோது, ஆட்சி அதிகாரத்திற்கு வெளியில் இருக்கும் "கள்ளர் காவல்" போன்ற குறுக்கீடுகளை விரும்பவில்லை. அதிகார மையத்தின் கீழ் அரசாட்சி புரிந்த கள்ளர்கள்தான் நாளடைவில் சமூகத்தின் விளிப்பு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். குற்றப் பரம்பரைச் சட்டம் என்னம் கைரேகைச் சட்டம் மூலமாக அவர்களை ஓர் எல்லைக்குள் முடக்கிவைத்து, அவர்களது அசைவுகள் கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருந்தது

**குற்றப்பரம்பரைச் சட்டம்**

புதினத்தில் குற்றப்பரம்பரைச் சட்டம் பற்றிய செய்தி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. உலக வரலாற்றில் இயற்றப்பட்ட சட்டங்களிலேயே மிகவும் கொடூரமானது குற்றப்பரம்பரைச் சட்டம் என்றால் அது மிகை அல்ல. எங்ஙனம் சாதியம் பிறப்பின் அடிப்படையில் மனிதனை உயர்ந்தவன் தாழ்ந்தவன் எனப் பிரித்ததோ, அதுபோல இச்சட்டம் மனிதனை பிறப்பின் அடிப்படையில் நல்லவன், கெட்டவன் என வகைப்படுத்தியது. ஒருவன் குற்றம் செய்தானோ, இல்லையோ, அவன் ஒரு குற்றவாளி என அறிவித்தது. கடுமையான பஞ்சங்கள் மக்களின் வாழ்வியலை மொத்தமாகப் பாதித்தது. மக்கள் உணவிற்காக மிகவும் கஷ்டப்பட்டனர். அதனால் களவு, கொள்ளை, உணவு கிடங்குகளைக் கொள்ளையடித்தல் போன்ற நிகழ்வுகள் அதிகரித்தன. அவற்றைக் கட்டுப்படுத்த அரசாங்கத்திற்குச் சில கடுமையான சட்ட வழிகள் தேவைப்பட்டன. மேற்கூறிய சூழ்நிலைகளை மையமாகக் கொண்டுதான் குற்ற பரம்பரைச் சட்டம் இயற்றப்பட்டது.

"குற்றப்பரம்பரையாக அறிவிக்கப்பட்ட இனக்குழுவினர் அனைவரும் தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு ஒருவர் தன்னை பதிவு செய்து கொள்ளத் தவறினாலோ அல்லது பதிவின் பொழுது தன்னைப் பற்றி தவறான தகவல்களைத் தந்தாலோ அது குற்றமாகக் கருதப்பட்டு தண்டிக்கப்படுவர்"[6] பக்-57

தாதனூர் மக்களின் வாழ்வியல் இரண்டறக் கலந்த காவலும் களவும், பற்றியும் அச்சமூகம் அடைந்த துயரத்தையும் நாவலாசிரியர் அழகாக எடுத்தியம்பியுள்ளார்.

தாது வருடப்பஞ்சம்

தமிழகத்தில் 1876-78 ஆம் ஆண்டுகளில் மாபெரும் பஞ்சம் ஒன்று தோன்றி இலட்சக்கணக்கான மக்களின் உயிரைக் குடித்தது. இதனைத்தாது – ஈசுவர ஆண்டுக் கருப்பு என்று குறிப்பிடுவார்கள். உண்ண உணவின்மையாலும் உப்புக் கிடைக்காமையினாலும் குடிகள் வெறுங்காட்டுக் கீரைவகைகளை வேகவைத்து தின்றார்கள் என்றும், சிலர் களிமண் உருண்டைகளையும் தின்று உயிர் துறந்தாக்ள என்றும், குடிமக்கள் ஆயிரக்கணக்கில் குடிபெயர்ந்து அலையலானார்கள் என்றும் பல குறிப்புகள் புதினத்தின் இடம் பெற்றுள்ளது.

தாது வருஷத்தில் கடும் பஞ்சத்தையும்பின் தொடர்ந்து கொள்ளை நோயையும் மதுரை சந்திக்கிறது. நிறைய உயிர் சேதம் நிகழ்கிறது. முல்லைப் பெரியாறு அணை கட்ட ஆரம்பிக்கிறார்கள். அரசு தாதனூர்க்காரர்களின் காவல் உரிமையை ரத்து செய்கிறது. எதிர்த்தவர்கள் சிறைப்படுகிறார்கள். தாதனூர்க்காரர்கள் வேறுவழியின்றி வெளிகிராமங்களில் காவல் பிடிக்கிறார்கள்.

நேர்மையான குடிமக்களை தானியக் கொள்கைக்காரர்களாக, தாதுவருடப் பஞ்சம் மாற்றும்போதோ, குடி காவல்காரர்களை, வணிகர்களின் வண்டிகளுக்கான காவல்களாக மாற்றியதில் வியப்பில்லை. வர்க்கச்சமூகத்தில் வேலை என்பது, தன் பஞ்சத்தால் செயாற்றுப் போகும் நிலையில் தம் காவல் தொழிலை வணிகர்களுக்கு தாதனூர்க்காரர்கள் விற்கிறார்கள்.

**வரலாற்றுச் செய்திகளும் இன வரைவியல் செய்திகளும்**

மாலிக் காபூரின் மதுரைப் படையெடுப்பில் கோட்டைக் காவலனான கருப்பணன் இறந்து விட அவன் கர்பிணி மனைவி சடச்சி தப்பிப் பிழைத்து சிசு ஈனுகிறாள். அவளது சந்ததி கள்ளர் இனமாக தாதனூர் என்ற இடத்தில் நிலை கொள்கிறது. மதுரையின் மேற்குக் கோபுர வாசலுக்கு நான்கு கல் மேற்கே, நாகமலைக்கு தெற்கே, குண்டாற்றுக் வடக்கே, தொட்டப்ப நாயக்கனூருக்குக் கிழக்கே உள்ள கள்ள நாடு எட்டு நாடுகளையும் எண்ணற்ற உப கிராமங்களையும் உள்ளடக்கியது. இக்கிராமங்களில் ஒன்று அமண மலையின் அடிவாரத்தில் உள்ள தாதனூர்.

விஜயநகர அரசி கங்கா தேவி தன் இனமெழித்த முகமதிய சுல்தானை பழிவாங் மதுரை மீது போர் தொடுக்கிறாள். மதுரை விஜயநகர அரசின் வசமாகிறது. சில பல வாரிசுச் சண்டைகளுக்குப் பின் கிருஷ்ணதேவராயர் விஜய நகர அரசராகிறார். அவர் திறமையான தளபதியான விஸ்வநாதரை மதுரையை ஆட்சி செய்ய அனுப்புகிறார். திமலை நாயக்கர் காலத்தில் தாதனூர்க்காரர்களுக்கு மதுரை கோட்டைக் காவல் உரிமை வழங்கப்படுகிறது. கிழக்கிந்திய கம்பெனி மதுரையை எடுத்துக் கொள்கிறது. களவு மற்றும் காவல் குறித்த செய்திகள், தாதனூர் கள்ளர் குறித்த இனவரைவியல் செய்திகள் நூல் முழுவதும் விரவிக் காணப்பெறுகின்றன.

**முடிவுரை**

கடந்த கால வரலாற்றை மையமாக வைத்து வரலாற்று எச்சங்களின் துணையுடன் புனைவுடன் படைக்கப் பெற்ற காவல் கோட்டம் புதினத்தில் மதுரை நாயக்கர் கால வரலாறும், அக் காலக்கட்டத்தில் அம்மக்களின் வாழ்வியல் சூழல்களும், ஆங்கிலேயர்களின் வருகையில் ஏற்படும் சமூக மாற்றங்களோடு தொடர்புபடுத்தி ஆசிரியர் படைத்துள்ளார். காவல் மற்றும் களவு பற்றிய விவரங்களும், பஞ்ச காலம் பற்றிய குறிப்புகளும், கள்ளர் சமூகத்தை இன வரைவியல் கண்ணோட்டத்துடனும் அணுகி, வரலாற்று உட்கூருகளுடன் தன் படைப்பை படைத்துக் காட்டியுள்ளார் எழுத்தாளர் சு.வெங்கடேசன்.

**அடிக்குறிப்புப் பட்டியல்**

1. தமிழக வரலாறும் ஆட்சியும், டாக்டர் மா.இராசமாணிக்கனார்
   பக் – 259, முதற்பதிப்பு – ஜுலை – 2009, பூம்புகார் பதிப்பகம், சென்னை.
2. காவல் கோட்டம், சு.வெங்கடேசன், பக்-433
   முதற்பதிப்பு – டிசம்பர் -2013, விகடன் பிரசுரம் – சென்னை
3. இனவரைவியலும் தமிழ் நாவலும், ஆ.சிவசுப்பிரமணியன்,
   பக்-109, முதற்பதிப்பு – டிசம்பர் – 2014, நீயூ செஞ்சுரி புக் ஹவுஸ்
5. கள்ளர் சரித்திரம் – ந.மு.வேங்கடசாமி நாட்டார்,
   பக்-42, முதற்பதிப்பு – 2005, சாரதா பதிப்பகம், சென்னை
6. பிறமலைக் கள்ளர் வாழ்வும் வரலாறும் – இரா.சுந்தரவந்தியதேதேவன்
   பக்-571, முதற்பதிப்பு – 2011, சந்தியா பதிப்பகம், சென்னை